செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ௵ (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்:- சாதாரண ௵ வைகாசி மீ ௨௯ உ வெள்ளிக்கிழமை (12-6-1970) [இல-க0

நாவலர் அநுபந்தம்

இராமலிங்கசுவாமிகள் திரைப்படத்தில் நாவலர் பெருமானை அவமதிக்கும் காட்சிகள் இடம்பெற்றால் சைவ மக்கள் ஆட்சேபிக்க வேண்டும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

(முன்வளர்ச்சி — 4)

துமிலன்:

1948 தொடக்கம் கேட்பாரில்லாத - பழைமைகளை விசாரியாத - காலத்திலே, குறிப்பிட்ட வழக்குப் பற்றி மனம்போனவாறெழுந்த கற்பனைகள் எண்ணில.

கற்பனைகளுள் இப்பொழுதுந் தலைநீட்டிக்கொண்டிருப்பதொரு கற்பனை இராமலிங்க சுவாமி நீதி மன்றிற் பிரவேசித்தபோது நாவலர் எழுந்து நின்றார் என்பது.

இதனைத் 'துமிலன்' என்பவர் 24-8-61 'குமுதம்' வார இதழில் வெளியிட்டிருக்கின்றார்.

'அருட்பா என்ற பெயரை ஆட்சேபித்து வழக்குத் தொடுத்தார் நாவலர்' என்ற கர்ணபரம்பரைக் கதையை மறுக்கும் ம. பொ. சி. அவர்கள், குமுதத்தில் துமிலன் வெளியிட்ட கர்ண பரம்பரைக் கதையை மறுத்த அதே பக்கத்திலே தானே வெளியிட்டு "'துமிலன்' அவர்கள் எழுதியபடி தரப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டு, மெல்ல ஒதுங்கிக் கொள்ளுகின்றார். துமிலன் எழுதியபடி தரப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது, சிரிப்பை வருவிக்கின்றது. ம பொ. சி. ஒருவர் எழுதியதை அப்படியே வெளியிடும் வழக்கம் அரியர் என்பதை நினைவூட்டுகின்றது.

அது நிற்க;

'துமிலன்' கற்பனை ஆதாரமற்றது. நான்காம் பால பாடத்திலே 'ஆச்சிரமம்' என்ற பாடத்திறுதியில்,

'வேடநெறி நில்லாதார் வேடம் பூண்டென்பயன்'! என்ற திருமந்திரத்தையும்,

'வானுயர் தோற்றம் எவன் செய்யும்' என்ற குறட்பாவையும் தந்த நாவலர், — முன்னமே போலிய குட்பா மறுப்பெழுதிய நாவலர் இராமலிங்கரைக் கண்டதும் எழுந்து நிறபார் தாமோ? என்பதைக் கற்பனை செய்து காணவல்லார் காண்பாராக.

நாவலர் பக்கத்தார்:

நாவலர் எழுந்தார் என்ற கற்பனையை வெறுக்கும் நாவலர் பட்சத்தாரொருவர் நாவலருக்குக் கோர்ட்டில் ஆசனம் வழங்குகிறார். அவர் இராமலிங்கரை நிற்க வைப்பார் போலும். நாவலர் எழுந்து நிற்கவும் வேண்டாம்; நாவலருக்குக் கதிரை கொடுக்கவும் வேண்டாம்.

வழக்கில் நடந்ததை — நிரூபிக்கத்தக்கதை — வெளியிட்டாற்போதும்.

ம. பொ. சி.

வ. க. ஒ 214-ஆம் பக்கத்தில்,

நீதிமன்ற தஸ்தாவேஜு அவதூறு வழக்கு என்கின்றது என்று சொல்லும் ம. பொ. சி. அவர்கள்

'இராமலிங்கபிள்ளை மஞ்சக்குப்பக்கோர்ட்டிலே தாம அவதூறாகப் பேசவில்லை என்று மறுத்து, எல்லாராலும் நகைக்கப்பட்டது அவ் வழக்குப் புத்தகம் பேசும்' என்கின்றாரே நாவலர் பெருமான். அவ் வழக்குப் புத்தக தஸ்தாவேஜு பேசுவதை சற்றே வெளியிட்டிருக்கலாகாதா?

நாவலர் வழக்குக்கு 30 வருடம் பிந்தி, நா. கதிரை வேற்பிள்ளையின் மருட்பா மறுப்பில் இருபத்தேழு (27) குற்றங்கண்டு, இராமலிங்கரின் தமையனார் புதல்வர் ஒருவர் வழக்குத் தொடர்ந்து தோல்வியடைந்தாரே! கதிரைவேற்பிள்ளை இருபத்தேழு குற்றங்களையும் நிரூபித்து வெற்றிமேல் வெற்றி எய்தினாராமே! திரு வி. க. கதிரவேற்பிள்ளை சரித்திரத்தில் வழக்கிலக்க முதலியன வெளியிட்டிருக்கின்றாரே! வழக்கு மன்றத் தஸ்தாவே

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நின்னாவார் பிறரன்றி
நீயே யானாய்
நினைப்பார்கள்
மனத்துக்கோர்
வித்தும் ஆனாய்
மன்னனாய் மன்னவர்க்கோர்
அமுதம் ஆனாய்
மறைநான்கும் ஆனாய்
ஆறங்கம் ஆனாய்
பொன்னானாய் மணியானாய்
போகம் ஆனாய்
பூமிமேல் புகழ்தக்க
பொருளே உன்னை
என்னானாய் என்னானாய்
என்னின் அல்லால்
ஏழையேன் என்சொல்லி
ஏத்துகேனே

திருச்சிற்றம்பலம்
-திருநாவக்கரசுசுவாமிகள்.

ஜூன் 14ம் திகதி

இலங்கையினது ஏழாவது பாராளுமன்றத் திறப்பு விழா இலங்கைத் தேசாதிபதி உயர்திரு. வில்லியம் கோபல்லவா அவர்கள் தலைமையில் 14 6-70 பிற்பகல் 1 மணிக்கு சுதந்திரச் சதுக்கத்தில் ஆரம்பிக்கப்படும்.

அன்று முற்பகல் 11-30 மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற மண்டபத்தில் கூடுவார்கள். சபாநாயகர் உயர்திரு. ஸ்ரான்லி திலகரத்தினா அங்கிருந்து யாவரையும் வெளியே அழைத்துச் செல்வர். மோட்டார் வாகனங்களில் 12-05 மணிக்கு சுதந்திர சதுக்கத்துக்குப் புறப்படுவார்கள். மேற்சபை அங்கத்தவர்கள் 12-46 மணிக்கு வந்து சேர்வர். தேசாதிபதி அவர்களின் காரியதரிசி பாராளுமன்றச் செய்தியைப்படிப்பார். அதன் பின்பு பிரதம மந்திரியவர்கள் தமது உரைப்பிரதியைத் தேசாதிபதியவர்களிடம் வழங்குவார்கள்,

நிகழ்ச்சிகள்

1. தேசாதிபதி அவர்களின் செய்தி

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

பரிசுத்தவெற்றுவறகளைச்சேகரித்துப்

பரிசு பெறுங்கள்
மில்க்வைற்சோப்தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

திருமயிலை ஜம்புலிங்கம்பிள்ளை அவர்களை நினைவூட்டும் பெரியார்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தாரால் சேக்கிழார் விழாவில் சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்த அழைக்கப்பட்ட பெரியார் ராவ்பகதூர் நல். முருகேச முதலியார் அவர்கள் திருமயிலை ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள் ஞாபகத்தை நமக்குச் சிந்தனை செய்ய வைத்துள்ளார். ஜம்புலிங்கம்பிள்ளையவர்களுடன் அவர் நெருங்கிய தொடர்புடையவர் அவர் மூலமாக முதலியாரவர்கள் யாழ்ப்பாண மக்களின் பண்பாடு சமயவாழ்க்கை தாய்மொழிப்பற்று முதலியவற்றையறிந்திருக்கின்றார். ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராகவிருந்த பொழுதிலும் யாழ்ப்பாண மக்களுடைய சைவப் பெரியார்களைப்பற்றி யாழ்ப்பாண மக்களிலும் பார்க்கக் கூடுதலாக அறிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், காசிவாசி செந்திநாதையர், நா. கதிரவேற்பிள்ளை, சுவாமிநாத பண்டிதர் ம. க. வேற்பிள்ளை, நீர்வேலி சங்கரபண்டிதர், அ குமாரசுவாமிப் புலவர், சபாரத்தின முதலியார். சு சிவபாதசுந்தரம்பிள்ளை இவர்களைப்பற்றி கர்ணபரம்பரையாகவும், நூல்கள்வாயிலாகவும், நேர்முகமாகவும் அவர்கள் எழுதிய நூல்கள் வாயிலாகவும் தொண்டுகள் வாயிலாகவும் கூடிய அறிவைப் பெற்றவர். அவர்கள் வெளியிட்ட நூல்களின் பிரதிகளையெல்லாம் சேமித்து வைத்திருந்தார்கள்

இவ் விபரங்களையெல்லாம் திரு. முதலியாரவர்கள அவர்கள் மூலம் கேட்டறிந்திருந்தார் முதலியார் அவர்களுடன் உரையாடிய பொழுது ஈழத்துப் பெரியார்களைப் பற்றி ஆர்வத்துடன் கூறினார். தமது விரிவுரைகளிலும் அவ் அநுபவத்தை நாம் அறியக் கூடியதாகவிருந்தது.

முதலியாரவர்கள் சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றவர். சென்னைச் சைவ சித்தாந்த சமாஜத்தாரால் பிரசுரிக்கப்படும் 'சித்தாந்தம்' ஆங்கிலச் சஞ்சிகையினது பத்திராதிபராகக் கடமையாற்றி வருகின்றார். வாரணாசிப் பல்கலைக் கழகத்தில் 'சைவசித்தாந்தம்' என்னும் பொருள்பற்றித்தொடர்பாக பல விரிவுரைகளாற்றினர். அவ்விரிவுரைகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரால் ஒரு நூலாக வெளிவந்திருக்கின்றது, அவர் படாடொபமற்ற வாழ்க்கையை நடத்துகின்றவர், எளியவாழ்வும் உயர்ந்த லட்சியமுடையவர். உரையாற்றும்பொழுது கடவுள் பக்தியை மக்களிடத்தில் மிளிரச்செய்ய வேண்டுமென்பதே அவருடைய தூயநோக்கம். அவர் சிவபூஜா துரந்தரர்.

சிவபூஜா துரந்தரருக்கே பெரிய புராணத்தின் உண்மைகள் விளங்குமெனவும் குறிப்பிட்டனர்.

சைவ நாடக விழா

அகில இலங்கைச் சைவப் புலவர்சங்கச் சைவசமய நாடகவிழா தெல்லிப்பழை யூனியன் கல்லூரிமண்டபத்தில் 11 12-6-70 வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் கோலாகலமாக நிகழவிருக்கின்றது இவ் விரு தினங்களிலும் பன்னிரு நாடகங்களை நடாத்த பதினொரு மன்றங்கள் முன்வந்துள்ளன இந்நாடகங்களுள் பரிசுக்குரியவை தெரிவு செய்யப்பெறவிருக்கின்றன (ந.நி

நயினாதீவு பஜனைப்பாதயாத்திரை

நயினாதீவு ஸ்ரீ. நாகபூஷணியம்பாள் கோவில் இரதோற்சவம் தீர்த்தோற்சவக் காலங்களில் பஜனை செய்வதற்கு வண்ணை வைத்தீஸ்வரன் பஜனைச் சபை ஒரு கோஷ்டியை ஒழுங்கு செய்துள்ளது. ஷை கோஷ்டிக்கு தேவஸ்தான வித்துவான் திருப்பூங்குடி தீரு V K ஆறுமுகம் அவர்கள் தலைமை வகிப்பார். 15-6-70 திங்கட்கிழமை இரவு 7—30 மணிக்கு தேவஸ்தானத்திலிருந்து பஜனைக் கோஷ்டி புறப்படும். யாத்திரைசெல்லும் மார்க்கத்தில் கோஷ்டியினரை அபிமானிகள் உபசரிப்பார்கள்.

சபைகள் நிறுவுதல்

இப்போதுள்ள சமய ஆலோசனைச் சபைகள் யாவும் கலைக்கப்பட்டுப் புதுச் சபைகள் நிறுவப்படும். சபைகள், இந்துமத விவகார ஆலோசனைச் சபை, பௌத்த மத ஆலோசனைச்சபை றோமன் கத்தோலிக்கமத விவகார ஆலோசனைச்சபை, றோமன் கத்தோலிக்கமல்லாத கிறிஸ்துவ மத விவகாரஆலோசனைச்சபை, இஸ்லாமிய மத விவகார ஆலோசனைச்சபை நாட்டிலுள்ள மதங்களின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான திட்டங்களை உருவாக்கி, அவற்றைச் செயற்படுத்தவேண்டுமென்பதே கலாசார மந்திரியவர்களின் குறிக்கோளாகும்.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதன்புனல் வேந்தனுலோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சாதாரணரூ வைகாசி மீ உகூ-உ வெள்ளிக்கிழமை [1970]

ஆண்டான் அடிமைக் கொள்கையைக் காட்டும் நூல்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் சார்பில் 9-6-70ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நிகழ்ந்த சேக்கிழார் விழாவில் சைவசித்தாந்த வித்தகர் ராவ்பகதூர் நல். முருகேச முதலியார் B. A., "பெரியபுராணமும் சைவ சித்தாந்தமும்" என்ற பொருளைப்பற்றி சிறந்த கருத்துகளமைந்த சொற்பொழிவாற்றுகையில் பெரியபுராணம் ஒரு பக்தி நூலென்றும் ஆண்டான் அடிமைத் தத்துவமே அதன் உயிர் நாடியென்றுங் குறிப்பிட்டனர். சேக்கிழார் நாயனுர் புராணத்தைப் பாடிய அருளிய உமாபதி சிவாசாரியாரும் அத்தத்துவமே புராணத்தின் உயிரெனத் தமது சேக்கிழார் புராணத்தில் காட்டியுள்ளார்.

பெருங்காவியமாகிய பெரியபுராணத்தின் கதாநாயகராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய சரித்திரமே இத்தத்துவத்தை மலைவிளக்குப்போல காட்டுகின்றது. நம்பியாரூரருக்குப் பந்துவாய் புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியாருடைய புத்திரிக்கு விவாகம் நடக்கப்போகின்றது. மணமகன் மணப்பந்தலைச் சென்றடைந்துவிட்டனர். அப்பொழுது சிவபெருமான் ஒரு கிழப்பிராமண வடிவத்துடன் சென்று அடிமையோலையைக் காட்டி நம்பியாரூரனை அடிமைக்கொள்ளுகின்றார். இவ்வரலாற்றைக் கூறும் பகுதியை சேக்கிழார் நாயனுர் 'தடுத்தாட்கொண்ட புராணம்' என அழைக்கின்றார். ஆட்கொள்ளுதல்-அடிமை கொள்ளுதல்.

சுந்தரமூர்த்தி நாயனுர் சிவபெருமான் 'பித்தா' என்றடியையெடுத்துக் கொடுக்க 'பித்தாபிறை சூடி' என்ற தொடக்கத்தையுடைய தேவாரப் பதிகத்தைப் பாடியருளினர்.

"எந்தவகையாலும் உன்னை மறவாமல் நினைக்கின்றேன். என் மனத்துள்ளே உன்னைப் பதியவைத்துவிட்டாய். அத்தனே, ஆயா, அன்னே, ஆகி, அண்ணா, ஆளுய், ஆற்றாய், அழகா, உனக்கு இப்போது ஆளானேன். முன்பு ஆளல்லேன் என்று மறுத்தேன் இனி அவ்வாறு மறக்கமுடியுமோ? முடியாது"

என அப்பதிகம் முழுவதும் நம்பியாரூரர்தான் சிவபெருமானுக்கு என்றென்றும் அடிமையென்பதை நிரூபிக்கின்றார்.

'என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லனே' என்கின்றார் தாயுமான சுவாமிகள்.

"பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பற்றிய பாசங்களின் இலக்கணங்களையும், பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், எத்தனையும் பெரிய சிவபெருமான் எத்தனையும் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஒயாதென்றும் உபகரிக்கும் பெரும்கருணையும் இவ்வியல்பின் அனந்தகோடியில் ஒரு கூறையினும் உடையவர் ஒருவர் நமக்கில்லாமையையும் இடையறாது சிந்திக்கச் சிந்திக்க நமக்குச் சிவபெருமானிடத்தில் அன்பு விளையும்" என நாவலர் சைவ வினுவிடையில் கூறியிருத்தலையும் நோக்குக.

சிவனுடைய அடியவர்கள் புகழுடையவர்கள், பேரானந்தத்தைப் பெற்றவர்கள். அவர்கள் என்றும் நித்தராய் வாழ்வார்கள் என்பதைக் குறிக்கவே சேக்கிழார் நாயனுர் தமது ஐந்தாம் வேதமாகிய புராணத்தை அடியார் பெருமையினையே விளக்கிப் பூர்த்திசெய்கின்றனர்.

என்று மின்பம்பெருகு மியல்பினு
லொன்று காதலித் தாளமு மோங்கிட
மன்று ளாடி யாரவர் வான்புகழ்
நின்ற தேங்கும் நிலவி யுலகெலாம்.

வேலணைத் திருஞானசம்பந்தர் மடாலயம்

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை வளவில்உள்ள இம் மடாலயத்துக்கு நிரந்தர மானகட்டடமமைத்து அதில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனுர் திருவுருவமொன்றினை நிறுவுவதற்கு திரு ஐ. இராசா அவர்கள், இராஜஸ்ரீ, 40 M. பயர் லெபர் கிறெஸன்ற் சிங்கப்பூர் காலஞ்சென்ற தமது பாட்டனுர், வேலணை திரு. ஐ மயில்வாகனம அவர்களுஞாபகமாக, ரூபா 389 நன்கொடையாக வழங்கியுள்ளார்.

பழைய மடாலயம் கந்தோராகவும் வகுப்பறைகளாகவும் மாற்றப்பட்டு விட்டன. 1960 ஆம் ஆண்டில் அரசாங்கம் பள்ளிக்கூடத்தையும் சொத்துக்களையும் தேசிய மயமாக்கிவிட்ட காலத்தில் பள்ளிக்கூடத்தின் முகாமைக்காரர் மடாலயம் கட்ட நிலம் கொடுக்கும்படி மனுச்செய்தனர் 1964 ல் அரசாங்கம், அக்கால அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா அவர்களையும் இணைப்பாரிய வடமாகாண வித்தியாதரிசி திரு. சிவ. உ. சோமசேகரம் அவர்களையும் ஆணையாளராக நியமித்து ஒரு விசாரணை நடத்தியது. அவர்கள் விசாரணை முடிவில் சமர்ப்பித்த தீர்ப்பின்வண்ணம் மடாலயம்நிறுவுவதற்கு வித்தியாசாலைவளவில் 4 பரப்பு வழங்கலாமெனவும் மடாலயத்தில் நிகழவேண்டிய சமயத் தொண்டுகள் நடைபெறுதகாலத்தில் கட்டடமும் நிலமும் அரசாங்கத்துக்குச் சேரவேண்டுமெனவும் அவர்கள் சிபார்சு செய்துள்ளார்கள். அதன் பிரகாரம் மடாலயக் கட்டடம் அமைக்க உத்தரவு கோரி நிருவாகிகள் வித்தியாதரிசிக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கின்றனர்.

இப்பொழுது தற்காலிகமான கொட்டகையே மடாலயமாக உபயோகிக்கப்பற்று வருகின்றது. அதில் தேவாரவகுப்பு, குருபூசைகள் முதலிய தொண்டுகள் சைவப் பெரியார் சிவபூசாதுரந்திரர் திரு. வே. பசுபதிப்பிள்ளை அவர்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மடாலயச் செலவுகளுக்குரிய நிதியை சைவாபிமானிகள் மனமுவந்து வழங்கிவருகின்றனர்.

—o—

நாவலர் அநுபந்தம்

(1-ம் பக்கத்த வளர்ச்சி)

ஜில் இருபத்தேழு குற்றமும் இருக்குமே! அவற்றை ம. பொ. சி. வெளியிட்டு ஆராய்ந்திருக்கலாமே. நீரூபணமில்லாத கர்ணபரம்பரைக் கற்பனைகளுக்குச் செவிசாய்ப்பதினும் இது விசேடமன்றே!

ஒரு வேண்டுகோள்:

ஒவ்வொருவரும் தத்தம் மனசிற் பதிந்தவரைப் பேணிப் போற்றுவதை நிந்திக்கவோ தடுக்கவோ யாருக்கும் அதிகாரமில்லை.

இராமலிங்கரைப் போற்றுவார் போற்றுக. அவ்வாறே நாவலரைப் போற்றுவாரும் போற்றட்டும். ஒருவரை உயர்த்த மற்றவரைத் தாழ்த்துவதென்பது அடாதது.

இராமலிங்கர் திரைப்படத்திற் காட்சியளிப்பார் என்று கதை. அதில் நாவலரைத் தொடர்புபடுத்தி அவரை எழுந்து நிற்கச்செய்வதாயின் அது ஆட்சேபணைக்குரியது.

நாவலரபிமானிகளில் அதிகாரம் படைத்தவர்கள், அந்தக் கற்பனைக் கட்டுப்பற்றி முன்னமே சிந்தித்துச் செய்வனசெய்யவேண்டுமிச் செய்வாராக.

சுவாமிகள்:

தம்மயமிழந்து பக்திமேலிட்டுப் பரவசப்படுபவர் சுவாமிகள். சுவாமிகளின் வாயிலிருந்து பக்திக் கனிகளாகிய கவிகள் பிரவாகித்தன. இவ்வாறுள நிலை சுவாமிகளுக்கு இயற்கைகொடை. ஆனுல், சுவாமிகளைச்சொல்வழிகேளாத சீடர்கள் நடத்தியிருக்கின்றார்கள். பந்தம் எத்தனை ரூபத்தில் வரும்!

வ. க. ஒருமைப்பாட்டில்

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 70 பண்ணை ரோட் திரு. பொ. தெய்வேந்திரம் அவர்களிடம் 1-3-67 தொடக்கம் 31-3-69 ந் திகதி வரை வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவை 1970 ம் ஜூலாய் (ஆடி) மீ 3உ (3-7-70) வெள்ளிக்கிழமை ஒன்பது மணி தொடக்கம் அதேயிடத்தில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.
கொமிஷனரும் வக்கீலுமதிப்பாளரும்

"இராசகிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம். 2-6-70
எம் 85. 5, 12-6-70

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 284-ஆம் நம்பர் கடையில் திரு. கா. ந. இளையதம்பி அவர்களிடம் 1969-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மாதம் 1ம் (1-3-69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில், 15-7-70 திகதிக்கு முன் மீட்கப்படாதவை 1970-ஆம் ஆண்டு யூலை (ஆடி) மாதம் 17-ஆம் திகதி (17-7-70) வெள்ளிகிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏலவிற்பனவாளரும் கோட்கொமிஷனரும்.
Commissioner Sales & Valuer.

"இராச கிரி"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
எம் 97 12, 19-6-70

சேக்கிழார் குருபூசை

இவ்வுலகம் உய்யும்படி "தீருத் தொண்டர் புராணம்" என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பெரிய புராணம்" பாடியருளிய அருள் நெறிச் செல்வராகிய சேக்கிழார் சுவாமிகளின் குருபூசை 8-6-70 ல் திருக்கேதீஸ்வரத்தில் வேத விமரிசையாக நடைபெற்றது அன்று காலை. ஸ்ரீ. கேதீஸ்வரப்பெருமானுக்கும் ஸ்ரீமதி கவுரியம்பாளுக்கும் விசேட அபிஷேகம் பூசை முதலியன சிறப்பாக நடைபெற்றன.

அன்று மத்தியானம் ஸ்ரீ நாவலர் மடத்தில் சேக்கிழார் சுவாமிகளின் திருவுருவப்படத்திற்குப் பூசை அர்ச்சனை செய்து மாகேஸ்வர பூசை நடைபெற்றது பல அடியார்கள் இவ்வைபவங்களில் பங்கு பற்றியுள்ளார்கள்.

'சிடர்கள் சச்சரவு', 'கதவு பூட்டப்பட்டது' என்ற தலையங்கங்களில், 390 391 ஆம் பக்கங்களில் சுவாமிகள் பங்குத்தால் கொதிப்புற்றதை ம. பொ. சி காட்டியிருக்கின்றார்.

நாவலர் வழக்கு சுவாமிகளுக்குப் பந்த விடுதலையாயதென்பதைச் சிந்திப்பார் சிந்தித்தாலோ!

"நாவலர் தாசன்" வரிசை அறிதலோ அரிது

[புறநானூறு]

i. "எனதுரை தனதுரை" சம்பந்தர் தேவாரம், சம்பந்தர், "காசு நல்குவீர் மாசின் மிழலையீர்" என்று கடவுளிடம் கொஞ்சக்காசு கேட்கின்றார்.

ii. "பொன்னும் மெய்ப் பொருளுந்தருவான்" எனகின்றார் சுந்தரர் கடவுளிடம் பொய்வாதி ஆற்றிலே போட்டுக் குளத்திலே எடுக்கின்றார்.

iii "என்னிலும் எனக்கினியாரில்லை என்னிலும் இனியான் ஒருவன் உளன்" எனகின்றார் திருநாவுக்கரசர்.

iv. "வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட முழந் தருவோய் நீ" என்கின்றார் மணிவாசகர்,

x x x

"ஆவித்த நீரென்
நிரப்பினும் நாவித்த
இரவின் இளிவந்த தில்"
—எனபது தேவர் குறள்.

x x

"உனக்கு வேண்டுவதை
உடையானிடம் பெறு"
எனகின்றார் தத்துவப் பெரியார் ஒருவர். உடையான் = கடவுள்.

x x x

இனி, நமது இராமலிங்கரிடம் வாருங்கள் "பண உதவி நீதகஉதவி செய்பவர்களுக்கு இது காட்டத் தடை இல்லை என்கின்றார் இராமலிங்கர். எது தெரியுமா? "இறந்தவர் திரும்பவும் எழுவார்கள்" என்று தாம் வீடுத்த கடிதம.

"அவ நம்பிக்கையுடனிருக்தாலும் தமது சாலுக்குரிய வர்களாயிருந்தாற் போதும்" என்கின்றார் அந்த மனிதர் அக்கடிதத்தில். மனிசரை நம்பி வாழ்ந்த இராமலிங்கரும்,

"நானுரைத்த வார்த்தை
யெல்லாம்
நாயகன்றன் வார்த்தை
யன்றி
நானுரைக்கும் வார்த்தை
யன்று நாட்டீர்காள்
நம்புமினே நமரங்காள்
நற்றுணம் இதுவே"
என்று பாடுகின்றாரே!

[இந்துசாதனம் 23-2-68]

அவருக்குப் பாட்டொன்று; வசனமொன்று. பண விஷயத்தையும் கடவுளோடு வைத்திருக்கலாமே!

[வளரும்]

பிளக்பூல் சைவ சமய அபிவிருத்தி மன்றம்

பிளக்பூல், சைவசமய அபிவிருத்தி மன்றத்தின் மூன்ருவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அதன் தலைவர் திரு: மு. கா. கணபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் 3. 6. 70 புதன் கிழமை நடைபெற்றது. ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒவ்வொரு சமய உபந்நியாசம் சைவப் பெரியார்களைக் கொண்டு நிகழ்த்துவதென்றும் "திருநீறும் பஞ்சாட்சரமும்" என்னும் நூலை அச்சிட்டு விநியோகிப்பதென்றும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது

பின்வருவோர் புது வருட நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு மு. கா. கணபதிப்பிள்ளை. உபதலைவர்: திரு. S: அண்ணமலை, செயலாளர் திரு A சின்னையா, உப செயலாளர்: திரு P. துரைசாமி, பொருளாளர்: V. பசுபதி. இவர்களோடு சேர்த்து ஆறு பேரைக் கொண்ட நிர்வாக்சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 5528 D. C. J

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

1 பேதுறு அந்தோனிப்பிள்ளை
2 பெண் திரேசேம்மா
3 சந்தியாப்பிள்ளை பறுனுந்து துரைராசன்
4 பெண் புஸ்பம்
5 மூதலி தேவசகாயம்
6 பெண் செபமாலை, ஸ்ரேசன்ரோட் யாழ்ப்பாணம்
7 மேரி பெனடிற் ஆஸ்பத்திரிரோட் யாழ்ப்பாணம்
8 வல்லிபுரம் சிவகுரு ராசாவின் தோட்டம் —வழக்காளிகள்

எதிராக

1 சவிரிமுத்து அன்னம்மா
2 கௌரியல் சூசைப்பிள்ளை
3 பெண் மரியம்மா ஸ்ரேசன்ரோட், யாழ்ப்பாணம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B- 5528ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1970-ம் ஞு ஆனி மீ 24-ஆம் திகதி (24-6-70) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தோகை:-முதல் வட்டி நபாய் 8064-ம் 28-3-63 தொடக்கம் 15-7-68 வரைக்தும் நபாய் 6000-க்கு 9வீத வட்டியும் அதன் பின் முழுத்தோகைக்தும் இறுக்தும்வரை 5வீத வட்டியும் கோட்டுச் சேலவு நபாய் 628-67 சதம் ஏற்பட்ட சேலவு நபாய் 454-52 சதம் முடிவான சேலவு நபாய் 115-80 நிகழவிருக்தும் சேலவு நபாய் 52-35 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரையூர் கோவிற்பற்று சுண்டுக்குளி இறை கொண்டையாண்டித் தோட்டம் நில பர. 2. குளி 3 வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு கொன்வேன்ற் றேட்டு வடக்து ஆசுப்பத்திரி றேட்டு மேற்கு பாவிலு கைம்பெண் விக்ரோறியாவும் பங்கும் தேற்கு தோமாசுவினுதனம் இதடங்கலிற் சோரியலாய் 3/4 பங்கும் அதற்குரிய வைகளும் —

மா. முருகேசு J. P.,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும
"இந்திரபவனம்"
புங்குடுதீவு,
எம். 93 12-6-70

Commission Sale

கோட்டுக் கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில். வழ இல: 10119

1. நடராசா சிவஞானம் 2. பெண் இராசம்மா
கரணவாய் தெற்கு, —வழக்காளிகள்

எதிராக

1. சின்னவன் மாணிக்கம், 2. ஆள்வான் மகாலிங்கம் 3. பெண் அருமை, 4. கறுவல் செல்லன் அல்லது சின்னராசன் 5. பெண் தெய்வி 6. மாணிககம் சின்னையா — இமையாணன் குறிச்சியைச் சேர்ந்தவர்கள். — எதிராளிகள்

மேற் குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்களை 1970 - ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 -ம் திகதி (3—8—1970) திங்கட் கிழமை முற் பகல் 9-30 மணி அளவில் குறித்த ஆதனங்க ளிடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று

1. இமையாணன் குறிச்சியிறை இணக்கியார் தோட்டம், மறுபிரிவுகளும் அல்லது மயில் வழவு கி. ப்ர. 48 குளி 10 இது 1960 -ம் ஆ. தை 20 -ந் திகதி உலாந்தாமேஸ்தர் T. சுப்பிரமணியம் என்பவரால் 2108 இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின் படி கி ப 49. குளி 5, 1/32 இதில் குறித்த படத்தில் கண்ட 9 ம் துண்டுககு கி பர 8 குளி 2, 22/32 ல் மேற்குப் பக்கமாக கி ப 3 குளி 2, 22/32. எல்லைகிழககு ஆள்வார் மகாலிங்கம் பெண் அருமைக்குடையவாதனம் வடக்கு பொதுப்பாவிப்புக்காக விடப் பட்ட கையொழுங்கை. மேற்கு சின்னவன் நல்லானுக்குடைய வாதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வெல்லைகருட்பட்டவையடங்கலும் குறித்த படத்தில் கண்ட 11-ம் துண்டிலுள்ள கிணற்றிலும் 5 ம் துண்டாகிய கையொழுங்கை கிலத்திலும் இதற்குரியபங்கும்.

மதிப்பிட்ட விலை: ரூபா. 2,200-00

2. ஷை ஆதனம் கி பர 48 குளி 10-ல் மேற்குறித்த படத்திற் கண்டிருக்கும் 4-ம் துண்டுககு கில 4 குளி 11, 11/32. எல்லை மேற்கு காக்கையன் கணபதிக்குடையவாதனம், வடக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கும் பங்காளருககுமுடையவாதனம். கிழக்கு காசி சின்னத்தம்பிக்குடைய வாதனம். தெற்கு பொதுப் பாவிப்புக்காக விடப்பட்ட கையொழுங்கை. இவ்வெல்லைகருட் பட்டவை யடங்கலும், குறித்த படத்தல் கண்ட 11 ம் நம்பர் துண்டிலுள்ள கிணற்றிலும் 5ம் துண்டாகிய வழி கிலத்திலும் இதற்குரிய பங்கும்.

மதிப்பிட்ட விலை: ரூபா. 3,320-00

தீர்வைத்தொகை	ரூபா 2225-50
வட்டி ரூபா 1500 க்கு 12 விதப்படி 12-7-68 தொடக்கம் 4-9-68 வரை	26-25
வட்டி ரூபா 2251 க்கு 5 விதப்படி 4-9-68 தொடக்கம் 3 2-70 வரை	159-35
வட்டி ரூபா 2251 -க்கு 5 விதப்படி 3-2-70 தொடக்கம் 3-7-70 வரை	46-90
செலவுத் தொகை	266-38
மொத்த ரூபா	2724-38

சிவலிங்கநிலையம், வி. மு. ரோட், பருத்தித்துறை, 30-5-70.
க. நல்லலிங்கம்
ஏல விற்பனையாளர் & விலைமதிப்பாளர்.
எம். 80 5—6—70.

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு, வலந்தலை, சயம்புவீதி திரு. அருணாசலம் தம்பையா அவர்களிடம் 1968ஆம் ஞு அக்டோபர் மீ 1—ஆந் திகதிக்கு (1-10-68) முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் 1970-ஆம் ஞு யூன் (ஆனி மீ 30-ம் உ (30-6-70) செவ்வாய்க்கிழமை முற்பகல் ஒன்பதரை மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. சே. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்,
கோட் கொம்பிசனரும்,
விலைமதிப்பாளரும்.
"இராச கிரி"
643, காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்,
எம் 81 5, 12-6-70

அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் 68 பருத்தித்துறை வீதி, திரு. இராமதாஸ் செல்லத்துரை அவர்களிடம் 1969ம் ஞு யூன் (ஆனி) மாதம் 1-ம் திகதி (1-6-69) க்கு முன் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடைவு நகைகள் 1970-ம் ஞு யூன் (ஆனி) மாதம் 25-ம் திகதி (25-6-70) வியாழக்கிழமை முற்பகல் ஒன்பதரை மணிதொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தல் விற்கப்படும்.

வி. சே. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்
"இராசகிரி"
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
எம். 71 5, 12—5—70

அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் இல: 24, முதலாம்குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் "லிங்கம்ஸ் போன் புரோக்கேர்ஸ்" என்னும் விலாசத்தில் அடைவு பிடித்த க சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1967ம ஞு தை மாதம் 1-ம் திகதி தொடக்கம் 1969ம் வைகாசி மீ 31ம் திகதி முடிய அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும நகைகள் யாவும் என்னுல் 1970-ம ஞு ஆவணி மீ 5-ம் திகதி புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் ஷை விலாசத்தில் நடக்கும் அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்
1970-ஆம் ஞு ஆனிமீ 9-ம் திகதி.
எம். 98 12—6—70
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனரும்.
விலைமதிப்பாளரும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. சுப்பிரமணியம் செட்டி செகநாதன் செட்டி
2. பெண் அன்னப்பா இருவரும் பெரியகடை, யாழ்ப்பாணம்.

வழ: இல M. B. 8712 எதிராக —வழக்காளி

1. தாவீது இராசரத்தினம் தேவசகாயம்
2. கைம்பெண் ஒலிவ் பாக்கியரத்தினம் தேவசகாயம் 10. டி அல்விஸ் அவன்யு, மவுன்லெவினியா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8712-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970-ம் ஞு ஆடி மீ 27-ஆம் திகதி (27-7-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 14,200-00ம், 27-12-66 தொடக்கம் 20-10-69 வரைக்கும் ரூபாய் 8,000-00க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடம் ஒன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 623 சதம் 36 இதில் ரூபாய் 200-00 கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று 'பண்டாரத்தோட்டம், சறுக்கன்தோட்டம்' கிலப்பரப்பு 8ம் றூட்ஸ் 6, 3/10ம் வீடும். இணறும். அத்திவாரம்போடப்பட்ட என்னுமொரு வீடு, செய்பயிர் வான்பயிர்களும் இதற்கெல்லை கிழக்கு சாராலுயூசி சின்னுச்சிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம், வடக்கு பூபாலசிங்கம் பெண் இளாராமேபல் அதிசயமலருக்கும் மறு பங்காளருக்கும் உரிய ஆதனம். மேற்கு இராசாவின் தோட்டம் ரோட்டு. தெற்கு அருளானந்தத்தின் ஆதனம். பதிவு இலக்கம்; D. 121/95

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். 5-6-70.
நா. தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 87 12-6-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

1. மதியாபரணம் மூத்துலிங்கம்
2. பெண் மகேஸ்வரி இருவரும் நீர்வேலி

இல: M. B. 9452 எதிராக —வழக்காளி

1. விநயர் பொன்னுத்துரை 2. பெண் இரத்தினம் இருவரும் நீர்வேலி வடக்கு நீர்வேலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9452 இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஞு ஆவணி மீ 8-ந் திகதி (8-8-70) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 2760/- இன்னும் 28-9-67தொடக்கம் 11-6-68 வரைக்கும் ரூபாய் 2000/- 8% வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 301-05 இதில் ரூபாய் 800/- கொடுபட்டது,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பிரிவு கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலி இறை "மங்களவத்தையும் மங்களவத்தை தோட்டமும்" பர கில, இலா. 4—0 வீடு கிணறு, செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு பெண் பொன்னம்மாவினுதனம். வடக்கு ஐயாத்துரை சின்னத்தங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு ஒழுங்கை முகப்பும் மிகுதிக் காணியும் தெற்கு கந்தையா பெண் செல்லமுத்துவினுதனம். இதடங்கலும் இக்காணிககு மேற்கிலிருககும காணியின் வடக்கெல்லை ஓரமாக மேற்கொழுங்கையிலிருந்து ஆறுமுள அகல ஒழுங்கை பாவிப்புரித்தும் மேற்கெல்லைக் காணிக்குரிய மேற்படி கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலுருத்தும் புற நீங்கலாக, பதிவு இலக்கம்: K, 239/72

14, டேவிற் வீதி
யாழ்ப்பாணம். 20--70
அ. போ. எதிர்மனசிங்கி,
கொமிசருனம், விலைமதிப்பாளரும
M 91, 12-6-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆனையவி கந்தையா, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

இல. M. B. 7351 எதிராக —வழக்காளி

பொன்னர் சின்னத்தம்பி கைம்பெண் சாசு. காலஞ்சென்ற பொன்னர் சின்னத்தம்பி, இறக்கைச்சந்தை ஒழுங்கை, மாணிப்பாய், என்பவரின் சட்டப்பிரதிநிதி —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 7351-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஞு ஆடி மீ 16ம் உ (16-7-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபாய் 9360/-ம் 7-4-1965 தொடக்கம் 11-6-1969 வரைக்கும் ரூபாய் 6000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுசசெலவு ரூபாய் 556-30 ரூபா 125/- கழிக்கவும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலி-மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலையில் இருக்கும் காணி 'குஞ்சிகொசதுளவின்' நிலப்பரப்பு நாலரை (4½)யும் கல்வீடும், செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றிலும் துர்வையிலும் அரைவாசிப் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும், எல்லைகிழக்கு தம்பு மாரிமுத்துவும் பெண் சரஸ்வதியின் ஆதனமும், வடக்கு ஒழுங்கை, மேற்கு இரத்தினம் கைம்பெண் முத்துவின் ஆதனம், தெற்கு நாகலிங்கம் பெண் பசுபதிப்பிள்ளையினது உரிமைக்காரரின் ஆதனம், இதடங்கலும் அதன் சொத்துரிமைகளும். பதிவு இல: E 304/285

"வேல் பதி"
புத்தூர்.
11-5-70
S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனரும். விலைமதிப்பாளரும்
எம். 100 12—6—70

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர், களபூமி, விளானை. இதம்பரப்பிள்ளை சண்முகம் கைம்பெண் தங்கமுத்து —வழக்காளி

வழ: M. B. 10048 எதிராக

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு

1. கணபதிப்பிள்ளை கந்தையா மகள் புஷ்பவதி
2. கந்தையா கனகரத்தினம் —எதிராளி

மேற்படி யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 10048-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ் காணும் இரு துண்டுக் காணிகள் 1970-ஆம் ஞூ ஜூலை மீ 21-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (21—7—1970) முற் பகல் 9-30 மணி தொடக்கம் அவ்வக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:— ரூபா 8995/— என்னும் ரூபா 7000க்கு 5-6-68 தொடக்கம 14-10 69 வரைக்கும் 12 வீத வட்டியும் கூடிய தொகைக்கு 14-10-69 தொடக்கம் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 423/75.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைப் பகுதி வட்டுக்கோட்டை மேற்கிறை "கம்பிராய்புலம் அல்லது கம்புராப்புலம்" நெ. பர 9 இணுவும். இதற்கெல்லை கிழக்கு ரோட்டு வடக்கு நெ. பர. 9. கொண்ட கம்புராப்புலம் என்னும் காணியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனமும் மேற்கு ஆறுமுகம் பெண் தெய்வநாயகத்தினுதனம் தெற்கு வாய்க்காலும், சாம்பசிவம் பெண் தங்கம்மாவினுதனமும் இலகுப்பிள்ளை சுப்பிரமணியத்தினுதனமும் சாம்பசிவம். பெண் தங்கம்மாவினுதனமும் இதடங்கலும்

2, ஷ வட்டுக்கோட்டை இறை "கம்பிராய்புலம் அல்லது கம்புராப்புலம்" நெ பர. 9¼ இதற்கெல்லை கிழக்கு கம்பிராப்புலம் அல்லது கம்புராப்புலம் என்னும் காணியும் சின்னத்தம்பி தருமலிங்கத்தினுதனமும் வடக்கு சின்னத்தம்பி தருமலிங்கத்தினுதனமும் மருதபிள்ளை கதிரவேலுவினுதனமும். மேற்கு நாகநாதர் இலதுப்பிள்ளையினுதனமும் ஆறுமுகம் பெண் தெய்வநாயகத்தினுதனமும் தெற்கு குறித்த தெய்வநாயகத்தினுதனமும் மேற்கூறிய ஆதனமும் இதடங்கலும். பதிவு E 346/209.

S. இரத்தினசபாபதி, J. P

கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்

விரேசன் ரோட், கொண்டாவில், 3-6-70 எம். 88 12-6-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: M, B. 9610

பொன்னையா விநாயகமூர்த்தி, காரம்பன் ஊர்காவற்துறை எதிராக —வழக்காளி

சூசைப்பிள்ளையினது கைம்பெண் மேரி மாகிறெட், காரம்பன் ஊர்காவற்துறை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 9610-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகள் 1970-ம ஆண்டு யூலை மாதம் 9-ஆம் திகதி (9-7-70) வியாழக்கிழமை முற்பகல 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 5050/-ம 30-11-67 தொடக்கம் 14-10-69 வரைக்கும் ரூபா 2500 -க்கு 12 வீத வட்டியும் அதன் முழுத் தொகை இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 464/10. இதில் கழிவு ரூபா 150/-.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி ஊர்காவற்துறைக் கோவிற்பற்று காரம்பனிறை 1. காலை தீறை புலம் தெற் பரப்பு 21½ இருபத்தொன்றரையும். வீடும் கிணறுகளும். எல்லை கிழக்கு பொனிப்பாஸ் பெண் திரேசம்மாவினுதனமும் எனக்குரியவாதனமும், வடக்கு ரோட்டு மேற்கு மந்திரி பெண் இராசமுத்துவினுதனம். தெற்கு மொனிப்பாஸ் பெண் திரேசம்மாவுக்கும் பாவிலுப்பிள்ளை பெண் றேசமுத்துவுக்குரியவாதனங்கள். இதில் கிழக்கருகாக வடக்கேயிருக்கும் ரோட்டிலிருந்து கிழக்கெல்லையிலிருக்கும் எனக்குரிய காணிக்குப் போக்கு வரவு செய்யும் வழியுரித்து புறநீக்கலாக இதடங்கலும்.

2. ஷ காரம்பன் நாரந்தனை இறை யாங்கன் சாட்டியும் யாங்கன் காடுமே நி. பர 13 பதின் மூன்று. இதில் சொரியலாய் ½ அரைவாசிக்குச் சரியாக ஆட்சிப்படி மேற்குப்பக்கமாக நி வ. 6½ ஆறரை. எல்லை கிழக்கு சு வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பியினுதனம். வடக்கு ரோட்டு மேற்கு மேற்கூறிய 1ம் ஆதனம் தெற்கு கீழ்க்காணும் 3-ம் ஆதனம். இதடங்கலின் சொரியலாக 1/2 அரைவாசி.

(3) ஷ காரம்பன் நாரந்தனை இறை யாங்கன் சாட்டியும் யாங்கன் காடும் நி. பர. 1 ஒன்றும் மேற்கெல்லைக்காணிக்குளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்' எல்லை கிழக்கு சு. வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பியினுதனம் வடக்கு மேற் கூறிய 2-ம் ஆதனம். மேற்கு மேற்கூறிய 1-ம் ஆதனம். தெற்கு மொனிப்பாஸ் பெண் திரேசம்மாவினுதனம். இதடங்கலின் சொரியலாக அரைவாசி.

க, சிவஸ்கந்தா

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்

நாகேந்திரமடம், வட்டுக்கோட்டை. 1-6-70, M 95. 12-6-70

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 12—6—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

"குருடுங் குருடுங் குருட் டாட்டமா"?

பக்தர்: "திருமுறைகளை, சைவப் பெருமக்கள் பய பக்தியுடன் போற்ற வேண்டும்; நமது இன்றைய நிலையை எண்ணிப் பார்க்க வேதனைதான் பிறக்கிறது; காலத்தின் தேவையை யுணர்ந்து தொண்டாற்ற அறிஞராவார்இன்றேழன்வரவேண்டும்' என்று சேக்கிழார் விழாவில், செந்தமிழ் சின்னத் தம்பியவர்கள், அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட் டிருக்கிறர்களாம்...!

சித்தர்: "உண்மையில் சிந்தித்துத் தெளிந்துசெயற்படும் நிலைக்குச் சைவ மக்களைத் தயாராக்கவேண்டும்; திருக்கோவில்களிலே செய்யத்தக்கதுளவை? செய்யத் தகாதவைஇவை என நாவலர் பெருமான் கூறியிருக்கிறரே; அவர் சொற் கேளாதவரும் சைவரா? நாவலர் நெறிமுறைகளைப் பேணுதுநடக்குந் திருவிழாக்களும் திருவிழாக்களோ? "...குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்; ...... குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடி, குருடுங் குருடுங் குழி விழுமாறே" என்ற நிலையில், நிற்கிறர்கள் நம் சைவமக்கள்? "வேண்டாத ஆட்டமும், பாட்டுக்களும்' ஆலயத்தில் எதற்கு? முன்னேற்றமான கோயில் நிர்வாகங்களை இவர்கள் பின்பற்றக்கூடாதா? யாரோடு நோவது? நாவலர்பெருமானை நாம் நினைப்பதேக்காலம் ....?

—"நாயன்மார் - நாதன் '

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 9333 D, C, J.

1 நவரெத்தினம் சபாரத்தினம்
2 பெண் ஸ்ரீ காந்தமலர் வட்டுக்கோட்டை கிழக்கு, வட்டுக்கோட்டை —வழக்காளி

எதிராக

1 சோமசுந்தரம் கதிரவேலு
2 பெண் பாக்கியம் வட்டுக்கோட்டை கிழக்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிககோட்டில் MB 9333 ஆம் இலகக வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஞூ ஆனி மாதம் 25-ம் திகதி (25-6-70) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக்காணிககுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை;— முதல் வட்டி ரூபாய் 4495-ம் 10-8-67 தொடககம 11-7-68 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 9% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 397-35 ஏற்பட்ட செலவு ரூபாய் 249-20 சதம் முடிவான செலவுரூபாய் 71-20 சதம் நிலுவையிருக்கும் செலவு ரூபா 76-45 சதம் கட்டப்பட்டது 200/- ரூபா

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை இறை உதுவைவலை நி. பர. 2 குளி 15 வான்பயிர் செய்மதிர்களும் எல்லை கிழக்கு நவரெத்தினம் இராசாவினுதனம், வடக்கு செல்லர் சிவசம்புவினுதனமும் ஒழுங்கையும், மேற்கு நடராசா பெண் கற்பகத்தினுதனம் தெற்கு மாரிமுத்து சொன்னம் பலம் பெண் நாகம்மாவினுதனம் தெற்கெல்லைக் காணிக்கு வடக்கெல்லையிலிருந்து தெற்கெல்லைப் புறமாக வழிப்பாதை உரித்தும் மேற்கெல்லைக் கிணற்றில் அரைவாசிப் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் புற நீக்கலாக பதிவு இல: E. 255/180

மா. முருகேசு, J.P.

கொம்மிஷனர், விலைமதிப்பாளர்,

"இந்திர பவனம்"

புங்குடுதீவு, 23-5-70. எம். 94, 12-6-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்தம்பி சுப்பிரமணியம், 257. காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். —வழக்காளி

இல: M B 10713 எதிராக

வைத்தியநாதன் பொன்னம்பலம், 71/6. நொதியானந்தா கலட்டி, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 10713ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1970-ம் ஞூ ஆவணி மாதம் 10-ம் திகதி (10-8-70) திங்கட்கிழமை முற்பகல 10 மணி மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1041-50ம், 27-3-69 தொடக்கம 17-1-70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 15 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 334-97

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி உடுவில் கோவிற்பற்று கந்தரோடையில் இருக்கும் காணிகளாவன 'சைமன் தோட்டம்' நிலப்பரப்பு மூன்று இதன்பதிவு இலக்கம் H 320/11 'சித்தன்தோட்டம் என்னும் காணி நிலப்பரப்பு இதன் பதிவு இலக்கம் H. 297/11 இரண்டுமாக சேர்ந்து ஒரு துண்டுக்காணி மொத்தமாக நிலப்பரப்பு பன்னிரண்டு இதில் பிரிக்கப்பட்ட நிலப்பரப்பு பத்தும் (10) முக்கால் (¾) குழியும் T. கந்தையா உத்தரவுபெற்ற நில அளவையாளர் யாழ்ப்பாணம் திகதி 10-11-55 இல் தயாரிக்கப்பட்ட நில அளவைப்படம் 137 இல் துண்டு 1 எனும் காணி நிலப்பரப்பு 10 குழி ¾. மாகிய துண்டு ஒன்று என்று மேற்சொல்லிய படத்தில் குறிப்பிடும் காணியும். வீடும், செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதன் சொத்துரித்துக்களும் எல்லை கிழக்கு துண்டு 2 என்று மேற் சொல்லிய நில அளவைப் படத்தில் குறிப்பிடும் காணி. வடக்கு துண்டு 2க்கு பிரதான ஒழுங்கையிலிருந்து தொடர்க்கும் ஒழுங்கை மேற்கு ஒழுங்கை, தெற்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் தங்கமாவின் ஆதனம்

S. சங்கரப்பிள்ளை J. P.

கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

"வேல் பதி" புத்தூர் 10 6-70 எம். 101 12-6-70

கோட்டு விற்பனவு விளம்பரம்

1 இராமநாதன் திருநாவுக்கரசுவும் பெண்
2 பாறுவதி தேவியும்,

இல: 316, கல்லூர் வீதி, கல்லூர் யாழ்ப்பாணம்.

இல: M. B. 9187 எதிராக —வழக்காளி

1 சின்னையா சிகவலிங்கம், இல: 43. கனகரத்தினம் வீதி; நாயன்மார்காடு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 9187-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ஆம் ஞூ ஆடி மீ 6-ஆம் திகதி (6-7-70) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 9340/-ம், 24-6-67 தொடக்கம் 25-11-67 வரைக்கும் ரூபாய் 7500/-க்கு 12வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 352-40

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி கல்லூர் கோவிற்பற்று கல்லூர் இறை நாயன்மார்குளம் தெற்குப்புலம் வயல் மேட்டுவயல். நாயன்மார்குளம், தெற்கு மேட்டு வயல் நி, பர. 5ம், 14, 47/50 குளியும். கல்வீடும். கிணறும், பயிர்களும், எல்லை கிழக்கு வீதி, வடக்கு சதாசிவம் கெங்காதரனுக்கும் பெண்ணுக்குமுரிய ஆதனம், மேற்கு செல்லையா பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம், தெற்கு வெற்றிவேலு கந்தையாவின் ஆதனம். இவையடங்கலும் Regd D. 25/258

J. A எட்வேட்,

கொமிஷனர் & விலமதிப்பாளர்

காரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை 9-6-70 எம். 99 12-6-70

அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் சீதாரி சப்பல்தெரு, 9-ம் நம்பர் வீட்டில் அடைவு பிடிப்பவர்களாகிய யோசேப் அன் கோ அவர்களிடம் 1967 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 3-ம் திகதி தொடக்கம் 1969 ஆம் ஆண்டு மாசி மாதம் 31-ம் திகதி வரையில் வைக்கப்பட்ட தவணை தப்பிய அடைவு நகைகள் 1970 ஆம் ஆண்டு ஆடி மாதம் 4-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி அளவில் மேற்படி இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனவு செய்யப்படுமென்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

இடாப்பு மேற்படி இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

Konamalai Ayadurai

கோணமலை ஐயாத்துரை

யாழ்ப்பாணம். 7-6-70 வெந்திஸ் மேஸ்தர்

யூன் 14 -ஆந் தேதி

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

2 மேற்சபைச் செய்தி
3 யூன் 21 பிற்பகல் 2 மணிக்கு பாராளுமன்றம் ஆரம்பமாகுமென்ற பிரேரணை
4 தேசாதிபதியவர்கள் உரையைப் பற்றி சபாநாயகர் வழங்கும் அறிக்கை
5 தேசாதிபதியவர்கள் உரைக்கு நன்றி. பிரேரித்தல் - அநுவதித்தல்.
6 ...ட்டத்தைப் பின்போடும்